# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.
## அசல் வழக்கு எண்.76/2024

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 19 ம் நாள் வெள்ளிகிழமை திரு/திருமதி. மேகநாதன், த/பெ. சின்னதுரை என்பவரின் சாட்சியாக வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது ஏற்பாட்டின்படி **திரு.கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மேகநாதன் | தொழில் | : |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னதுரை | வயது | : |
| கிராமம் | : | | | : |
| தாலுக்கா | : | | | |

**வா.சா.3 : முதல் விசாரணை :**

நான் கணபதிபாளையம் மின்சார வாரிய உதவி மின் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையில் ஆயிக்கவுண்டன்பாளையம் பகிர்மானத்திற்கு உட்பட்ட மின் இணைப்பு எண். 819 அசல் ஆவணங்களை யார் பெயர் உள்ளது என்பதை தெரிந்து கொள்வதற்காக சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது ஏற்கனவே வாசாஆ 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.
சர்வே எண் 412/7 க்கு ஆழ்துளாய் கிணறுக்கு 10 HP மின்மோட்டார் இணைப்பு பெறுவதற்காக பழனிவேல்சாமி விண்ணப்பம் கொடுத்துள்ளார். ஆழ்துளாய் கிணறு தனிக்கிணறு ஆகும். அது கூட்டுக்கிணறு இல்லை. சர்வே எண். 412/13 ல் உள்ள திறந்த கிணற்றுக்கு 10 HP மின்மோட்டார் மின்பழு 10 HP க்கு பதிலாக 5 HP மின்பழு மோட்டாருக்கு மாற்றியுள்ளார். மேற்படி கிணறு கூட்டுக்கிணறு என்பதால் துரைசாமி என்பவரிடம் ஆட்சேயபணையின்மை சான்று பெற்றுள்ளார். மற்றவர்களிடம் ஆட்சேயபணை பெறவில்லை. 5 HP மின் இணைப்பு கொடுக்கப்பட்ட கிணற்றின் கூட்டு உரிமையாளர்கள் பெயர் வா.சா.ஆ.7 ஆவணத்தில் பக்கம் 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பழனிவேல்சாமி சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற விண்ணப்பம் செய்தார் என்றால் சரிதான். விண்ணப்பம் செய்த ஆழ்துளாய் கிணறானது சர்வே எண். 412/7 ல் அவருடைய தனிப்பட்ட நிலத்தில் உள்ளதற்கு என்றால் சரிதான். ஆழ்துளாய்

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.19 18:51:56 +0530

கிணற்றிற்கு மின் இணைப்பு கேட்டது 10 HP மின்பமுதிறன் என்றால் சரிதான். ஆனால் அதே விண்ணப்பத்தை 5 HP மின்பழு திறனாக மாற்றி சர்வே எண். 412/13 ல் உள்ள கூட்டுக் கிணற்றிற்கு மாற்றி தருமாறு கோரினார் என்றால் சரிதான். சுயநிதி திட்டத்தில் ரூ.25,000 செலுத்தி பதிவு செய்துகொண்டால் முன்உரிமை அடிப்படையில் இணைப்பு கொடுப்பார்கள் என்றால் சரிதான். கடந்த 11.01.2002 ல் ரூ.25,125 செலுத்தி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அதனை தொடர்ந்து பழனிவேல்சாமியிடம் மின்இணைப்பிற்கான இதர கட்டணங்களை பெற்றுக்கொண்டு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி விண்ணப்பத்தில் தன் பெயரையும் சேர்த்து மின்இணைப்பு தரவேண்டும் என கோரி விண்ணப்பம் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. முத்துக்குமாரின் தந்தை சண்முகம் மின்இணைப்பு விண்ணப்பத்தில் தன் பெயரை சேர்த்துக்கொள்ளுமாறு கோரி விண்ணப்பம் செய்தாரா என்றால் இல்லை. முத்துக்குமாரோ, அவரது தந்தை சண்முகமோ தங்களுடைய பெயரை சேர்த்துக்கொள்ளாமல் மின்இணைப்பு கொடுக்கக்கூடாது என்று எந்தவித ஆட்சேயபணை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி முத்துக்குமார் அவரது தந்தை சார்பாக மின்இணைப்பிற்கு தொகை ஏதேனும் செலுத்தப்பட்டதா என்றால் யாருடைய பெயரில் விண்ணப்பம் உள்ளதோ அவர்களின் பெயரில்தான் இரசீது கொடுத்து வசூல் செய்யப்படும். கூட்டுரிமையாளர்கள் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் பணம் செலுத்தியிருந்தாலும் விண்ணப்பதாரர் பெயரில்தான் இரசீது தரப்படும். மற்றவர்கள் பெயரில் தரப்படமாட்டாது. மேலும் மின்இணைப்பு சம்பந்தமான தகவல் பரிமாற்றம் மின்வாரியம் சார்பில் விண்ணப்பதாரருக்குத்தான் அனுப்பப்படும். அதேபோல எத்தனை கூட்டுரிமையாளர்கள் இருந்தாலும், விண்ணப்பதாரரிடம்தான் தயார்நிலை குறித்து நாங்கள் கேட்போம் பரிசீலிப்போம்.

3.அவ்வாறு பழனிவேல்சாமி இந்த விண்ணப்பதாரர் தயாராக இருந்தார். மேற்படி மின்இணைப்பு பெற்ற சமயத்தில் பழனிவேல்சாமி 5HP மோட்டார் பயன்படுத்திக்கொள்ள துரைசாமிக்கு மூன்றரை நாளும், பழனிவேல்சாமிக்கு மூன்றரை நாளும் உரிமை இருந்த காரணத்தினால் துரைசாமியிடம் மட்டும் ஆட்சேயபணையின்மை பெற்றுக்கொண்டார் என்றால் அதுபற்றி நான் சொல்லமுடியாது ஆட்சேயபணை மின்வாரியத்திற்கு வரும்பட்சத்தில் மட்டுமே அதுபற்றி பரிசீலனை செய்வோம். துரைசாமி தனியாக தன்னுடைய பங்கிற்கு 3 HP மின்பழு கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார் என்றால் வாசாஆ 7 ஆவணத்தின் அடிப்படையில் இல்லை. தற்போதைய சர்வே எண். 412/13 ல் உள்ள 5 HP மின்மோட்டார் மின்இணைப்பு தொடர்பாக முத்துக்குமார் இன்றைய தேதி வரை எவ்வித ஆட்சேயபணை கடிதமும் தரவில்லை என்றால் தரவில்லை.

**மறுவிசாரணை:இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.19 18:52:02 +0530